# Reflection on The Prophet's Life

# நபிகள் நாயகத்தின் வாழ்வு ஒரு பார்வை

Excerpts from "In the Footsteps of the Prophet" by Tariq Ramadan

"பெருமானாரின் அடிச்சுவடுகள்"
தாரிக் ரமழான் அவர்களின் நூலிலிருந்து

Majlis Ugama Islam Singapura
(Islamic Religious Council of Singapore)

# கண்மணி நாயகத்தின் வாழ்வு ஒரு பார்வை:

("பெருமானாரின் அடிச்சுவடுகள்" - தாரிக் ரமழான் அவர்களின் நூலிலிருந்து)

**(மனிதர்களே!) உங்களிலிருந்தே ஒரு ரஸூல் உங்களிடம் திட்டமாக வந்து விட்டார்: நீங்கள் வருத்தப்படுவது அவருக்கு கஷ்டமாயிருக்கும். (நீங்கள் நேர்வழி பெற்று நன்மையடைய வேண்டுமென்று) உங்களின் மீது பேராசை கொண்டவர். (அன்றியும்) மு.ஃமின்களின் மீது அன்பும், கிருபையும் உள்ளவர்.**

**(சூரா தவ்பா: 128)**

---

கண்மணி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உயரிய வாழ்வு, எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும் வாழ்ந்த, வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு ஒளிமயமான வழிகாட்டியாகவும், சக்தி வாய்ந்த படிப்பினைகள் நிறைந்ததாகவும் உள்ளது. அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், ஒவ்வொரு மனிதனும் தன்னைப் படைத்த இறைவனுடனும், தன் சக மனிதர்களுடனும், தன்னைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்துடனும் கொள்ள வேண்டிய உண்மையான, உறுதியான உறவுகளைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

நம் உயிரினும் இனிய உத்தம நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சிறப்பான பிறந்த நாளை, இந்த மங்களகரமான ரபீவுல் அவ்வல் மாதம் 12-ம் தினம், மகிழ்வுடன் கொண்டாடும் நாம், அவர்களின் ஒளிமயமான வாழ்வையும், மரியாதைக்குரி நடைமுறைகளையும் நம் வாழ்விலும் பிரதிபலிக்கவும், அவர்களின் அழகிய அடிச்சுவட்டை பின்பற்றி, மார்க்கப்பற்றும், சமுதாய நல்லிணக்கமும் கொண்ட, எல்லோருக்கும் பிரயோஜனமான நல்ல முஸ்லிம்களாக திகழ முயற்சிப்போமாக!

"பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அடிச்சுவடுகள்" (Footsteps of the Prophet) என்கிற தாரிக் ரமழான் (Tariq Ramadan) அவர்களின் அழகிய நூலிலிருந்து நம் சிங்கப்பூர் முஸ்லிம்கள் அடையாளம் (Singaporean Muslim Identity, (SMI) அமைந்துள்ள அடித்தளத்தின் அற்புதமான கோட்பாடுகள், அருமை நபிகளாரின் வாழ்வியல் ஆதாரங்களின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதியாக உணர்கிறோம். இந்த கோட்பாடுகள், நம்மை **மார்க்கத்தில் மென்மை, அனைவருடனும் நட்புறவு, நலிந்தோருக்கு நேசக்கரம் நீட்டல், அமைதியான சூழல் மற்றும் புரிந்துணர்வுடன் சமுதாய முன்னேற்றம்** ஆகிய நற்செயல்பாடுகள்பால் அழைக்கிறது. நிச்சயமாக, இச்சிறப்பிற்குரிய கோட்பாடுகள், நாம் நபிகள் பெருமானாரின் உண்மை உம்மத்துகளாக திகழ்ந்து, உலகிற்கே அமைதியை போதிக்கும் மாதிரி சமூகமாக திகழ வழிகாட்டும்.

# சமயத் தொடர்பான மீட்சித்தன்மை

தனது 23 ஆண்டுகால நுபுவ்வத்தின் வாழ்வில், நமது நாயகம் தேடியதும், போதித்ததும், உலக மாயைகளிலிருந்து விடுதலையும், சுதந்திரமான, தூய்மையான மார்க்கத்தையும் தான்.

மக்கள் எல்லோரும் துயிலும் பொழுது, தான் விழித்து தூயவனை துதித்தார்கள். தன் அன்பர்கள் வாடிய சமயத்திலெல்லாம், அவர்களுக்காக வல்லவனிடம் இறைஞ்சினார்கள். தான் கஷ்டப்படுத்தப்பட்ட பொழுதும், அவமானத்திற்குள்ளாக்கப்பட்ட பொழுதும், உறுதியுடனும், பொறுமையுடனும் இருந்தார்கள்.

அன்பு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எல்லோருடனும் நேசம் பாராட்டியதுடன், அந்நேசத்தை தன்னைச் சுற்றியிருந்தோரிடமும் பரப்பினார்கள். தன் பரிவு, பாசம் மூலம் தன் அருமை மனைவியர்களை பூரிப்படையச் செய்த நபிளார் மீது; கலப்பற்ற, உண்மையான அன்பை அருமந்த ஸஹாபாத் தோழர்கள் கொண்டிருந்தார்கள். தான் அவர்களோடு கலந்திருப்பதன் மூலமும், அன்பு புன்னகைகள் மூலமும் அவர்களை சந்தோஷப்படுத்திய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், அவர்களில் ஒரு அடிமை நகரின் மறு கோடிக்கு அழைத்தாலும், உடன் சென்று, அவர்களின் கூற்றை பொறுமையுடன் கேட்டு, அவர்களையும் தனது ஒப்பற்ற அன்பின் மூலம் திருப்தி படுத்தினார்கள்.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எல்லோரையும் நேசித்தார்கள். மன்னித்தார்கள். குற்றம் குறைகளை விட்டும் பாதுகாக்கப்பட்ட ம.்.ஸூம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அனுதினமும் இறைவனிடத்தில் தவ்பா செய்தார்கள். கடும் குற்றங்களை புரிந்து விட்டு வந்தோரையும் கூட அன்பால் அணைத்து, அரவணைத்து, இறைவனிடம் மன்னிப்பு கோரச்செய்து, பாதுகாத்தார்கள். (பக்கம் 211-212)

இறைவனால் நேசிக்கப்பட்ட மஹ்பூப் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மானுடத்திற்கே ஒரு முன் மாதிரியாக திகழ்ந்தார்கள். இறைவனை வணங்கிய பெருமானானர், நெஞ்சுருக இறையை தியானிக்கவும் செய்தார்கள். எளியோருக்கு வாரி வழங்கிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எல்லோரையும் அன்பால் அரவணைத்து, அவர்களுக்காக தொண்டாற்றி, அவர்களை மனிதருள் புனிதர்களாக பரிணாமம் அடையச் செய்தார்கள். நூர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், பேரொளியான இறைவனின்பால் நம்மை சேர்க்கும் ஒளியாவார்கள். அவர்களின் ஒளிர் மிகு உன்னத வாழ்க்கையினை படித்த நல்லடியார்கள், அதனைக் கொண்டே பேரொளியான அல்லாஹ்வின் அன்பையும், அரவணைப்பையும், அடையப் பெற்றார்கள். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், வெளிரங்கமான மனித வாழ்வை விட்டுப் பிரிந்தாலும் நம் மேலான அடைக்கலமான அல்லாஹ் நமக்கு மிக அருகிலேயே இருந்து கண்காணிக்கக் கூடியவன் என்ற அடிப்படை உண்மையை உணர்த்தியே சென்றுள்ளார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் கிடையாது என்றும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவனது திருத்தூதர் என்றும் உணர்ந்து, அவர்களை எந்நிலையிலும் அன்பு கொள்ளவும், சக மனிதர்கள் மீதும், எல்லா படைப்பினங்கள் மீதும் அன்பு செலுத்தவும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். (பக்கம்-216)

# சமயத் தொடர்பான மீட்சித்தன்மை:
# படைத்த நாயனுடன் ஆழமான தொடர்பு மூலம்

தன் அருமைத் தோழர்கள் தங்களின் இதயங்களில் காரணமற்ற குற்ற உணர்வை வைத்துக்கொள்வதை திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வெறுத்தார்கள். மேலும், தம் தோழர்களுக்கு, நீங்கள் அன்பும் அருளும் நிறைந்த ஒருவனாகிய ஏக வல்ல நாயனுடன் தொடர்ந்து உரையாடுவதை விட்டுவிடவேண்டாம். அவனே, தன் பாவத்தை உணர்ந்து வருந்தி தன்னிடம் வருவோரை தன் கருணையால் அரவணைப்பவன் என்று உணர்த்தி வந்தார்கள். இது தான் பாவத்தில் தவறாக விழுந்து, பின் திருந்தி, இறைவன்பால் திரும்பி, பாவமன்னிப்பு கோரும் தவ்பாவின் உண்மை தத்துவம். உண்மையிலேயே இறைவன் இந்த மன மாற்றத்தை ஏற்றுக்கொண்டு மன்னித்து பரிசுத்தப்படுத்துகிறான். பெருமானாரும் இதனை பல சந்தர்ப்பங்களில் விளக்கியுள்ளார்கள். (பக்கம் 113)

ஒரு முறை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தாயி.்.ப் எனும் நகருக்கு சென்று அங்குள்ள ‘தகீ.்.ப்’ கோத்திர தலைவர்களை இஸ்லாத்தின்பால் அழைத்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்று, எதிரிகளிடமிருந்து முஸ்லிம்களை பாதுகாக்க உதவி புரிவார்கள் என்ற நம்பிக்கை பெருமானாருக்கு இருந்தது. ஆனால் தாயி.்.ப் வாசிகளோ, பெருமானாரின் நபித்துவத்தை பரிகாசம் செய்து, பல்வேறு இன்னல்களை அன்னவர்களுக்கு கொடுத்தார்கள். தனி நபராக, சக அரபு மக்களிடமிருந்தே பாதுகாப்பு கிடைக்காத பெருமானார் இறைவனை நோக்கி: “இறைவா! உன்னிடமே என் இயலாமையையும், வசதிகளற்ற நிலையையும், மனிதர்கள் முன்னிலையில் என் பலகீனத்தையும் முறையிடுகிறேன். கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளனே! நீயே பலகீனர்களின் நாயன். நீயே எனது இறைவன்.

> இறைவனே! என்னை யார் கரத்தில் ஒப்படைக்கப்போகிறாய்? என்னை வேதனைப்படுத்தவும் தயங்காத புதியவர்கள் கரத்திலா? அல்லது உன் எதிரிகளிடத்திலா? இறைவா! என் மீது நீ கோபம் கொள்ளாதிருக்கும் காலமெல்லாம் எனக்கு எந்த கவலையும் இல்லை. உன்னுடைய உதவி பிரகாசமான வழியை இன்னும் திறக்காத இச்சூழலில், ஈருலகத்தின் இருளையும் விலக்குகின்ற உன் ஒளிமயமான அருள் முகத்தில் தஞ்சம் அடைகிறேன். உன் சோதனை என் மீது சூழாதிருப்பதற்காக. இருந்த போதிலும், திருப்திப் படாத நிலையில் என்னை கண்டிப்பது உனது உரிமை. உன்னையன்றி சக்திபடைத்தவன் வேறு எவரும் இல்லை நாயனே!” (பக்கம் 68-69)

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சதாவும் தன்னைச் சார்ந்தவர்கள், சூழ இருந்தவர்கள் விஷயத்தில் கவனம் உடையவர்களாகவே இருந்து வந்தார்கள். அவர்களது அருமைத் தோழர்களும், அருமை மனைவியரும் பெருமானாரை

நீண்ட நேரம் இரவில் தனித்து வணங்குபவர்களாகவும், தன் நாயனோடு உரையாடுபவர்களாகவும், துஆ செய்தவர்களாகவும் கண்டுள்ளனர்.

ஒரு முறை அன்னை ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் ஆச்சரியத்துடன் வினவினார்கள்: யாரஸுலல்லாஹ்! முன்பின் பாவங்கள் பொறுக்கப்பட்ட தாங்கள், வணக்கத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டுமா? என்று. அதற்கு பெருமானார், என் நாயனுக்கு நான் ஒரு நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா? என பதிலளித்தார்கள். ஆனால் தன் வணக்கத்தின் கடுமையையும், சிரமத்தையும், தொழுகையிலோ, நோன்பிலோ, தியானத்திலோ, தன் தோழர்களுக்கு கடமையாக்கவில்லை. (பக்கம் 111)

# சமயத் தொடர்பான மீட்சித்தன்மை:
# எல்லோருடனும் நல்லுறவு மூலம்

முஸ்லிம்களிடையே பந்தப் பிணைப்பை உறுதிப்படுத்துவதற்காக, குறிப்பாக மதினத்து அன்சாரிகள் மற்றும் மக்கத்து முஹாஜிரீன்கள் மத்தியில் நாயகம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சகோதரப் பிணைப்பு ஒப்பந்தம் (யுடு-ஆருயுமுமுயுர்) ஒன்றை உருவாக்க ஏண்ணினார்கள். எனவே, ஒவ்வொரு மக்கத்து முஹாஜிரும், தன்னோடு பினைக்கப்பட்ட மதீனத்து அன்சாரி சகோதரருடன் சகோதரப் பிணைப்பு ஒப்பந்தத்தில் கட்டுப்படுகிறார். அந்த அன்சாரி சகோதரர், இவருக்கு தன் உடமைகளில் பங்களித்து, மதினாவில் கௌரவத்தோடு வாழ்வதற்கு உதவுகிறார். (பக்கம் 92)

இந்த ஒப்பந்தம் மதினாவில் ஒரு ஒற்றுமையான, உறுதியான முஸ்லிம் கூட்டமைப்பை உருவாக்கியது. முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்த இந்த ஆழமான அன்புறவு, பிற்காலத்தில் அவர்களை இறையன்பில் இலயிக்கச் செய்தது. (பக்கம் 92)

இந்த ‘‘சகோதரப் பிணைப்பு ஒப்பந்தம்’’ இஸ்லாமிய கூட்டமைப்பில் ஆத்மீக, லௌகீக ஒற்றுமையை தந்ததுடன், அன்பு ஸஹாபாத் தோழர்களின் இறை நெருக்கத்தின் இரகசியமாகவும் அமைந்தது. மேலும், இதுவே அவர்களின் உறுதியான இறை நம்பிக்கை, பெற்றோர் மீது வாஞ்சை, மனிதர்களுக்கு மத்தியில் ஒற்றுமை, உலகிற்கும் உலக மாந்தர்க்கும் சேவை, ஆகிய நற்குணங்களின் அடிப்படையாகவும் அமைந்தது.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வீட்டிலோ, வெளியிலோ இருக்கும் சமயம், அருமை மகளார் ஃபாத்திமா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வந்தால், அண்ணலெம் பெருமானார் எழுந்து, அன்புருக வரவேற்று, தன் அன்பையும், மரியாதையையும் தன் பாச மகளுக்கு செலுத்தி கௌரவிப்பார்கள். தன் மகளுக்கு தக்க மரியாதையையும், அன்பையும் தந்து பழக்கமில்லாத மக்கா, மதினா மக்கள் மாணல் நபியின் இச்செயலைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். தன் அன்பு மகளை பாசத்துடன் முத்தி, தன்னருகில் அமர்த்தி, அன்புருக அளவளாவிய நாயகம், இது தொடர்பாக ஏற்படும் குற்றச்சாட்டை குறித்து கவலை கொள்ளவில்லை. (பக்கம் 118)

அல் அக்ர.ஃ. இப்னு ஹாபிஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ''எனக்கு பத்து குழந்தைகள் உள்ளது. அவர்களில் ஒருவரையேனும் நான் முத்தமிட்டதே கிடையாது'' அதற்கு அன்பு நபிகளார், ''எவரொருவர் அன்பும், பரந்த மனப்பாண்பும் உடையவராக இல்லையோ, அவர் மீது இறைவனும் பரந்த மனப்பாண்மை உடையவனாக இருக்கமாட்டான்'' என்றார்கள். (பக்கம் 118)

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், சிறு குழந்தைகளை மிகவும் நேசிப்பவர்களாக இருந்தார்கள். குழந்தைகளின் வெகுளித்தனம், அவர்களின் கலப்பற்ற தூய உள்ளம், மற்றும் அவர்களின் அன்பு உள்ளமை பெருமானாரை மிகவும் கவர்ந்தது. அந்த குழந்தைகள் இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். ஆதலால் பெருமானாருக்கும் மிகவும் நெருக்கமானவர்கள். கலங்கமற்ற உள்ளம் கொண்ட மழலைகளை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் தோள்களில் ஏற்றி விளையாடுபவர்களாகவும், அவர்களை முத்தமிட்டு அவர்களின் வெகுளித்தனத்தின் எல்லையையே தொடுபவர்களாகவும் இருந்தார்கள். ஏனெனில் அது, உண்மையில் இறை துதிப்பே ஆகும்.

மேலும், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மழலைகளிடமிருந்து அவர்களின் வெகுளித்தனம் மற்றும் கவலையற்ற விளையாட்டுத்தனம் ஆகியவற்றை மிகவும் ரசிப்பவர்களாக இருந்தார்கள். குழந்தைகள் அனைவரையும், அனைத்தையும் ஆச்சரியத்துடன் பார்ப்பதைக் கண்டு உளம் மகிழ்ந்தார்கள். குழந்தைகளை உற்று நோக்குவது கொண்டு, இறைவனின் அழகை, கண்கூடாக கண்டு ரசித்தார்கள். சிலவேளை அழுதார்கள். இன்னும் சிலவேளை இறையின் அழகில் திளைத்தார்கள். (பக்கம் 213-214)

## எல்லோருடனும் இணக்கம் மூலம்

அனைத்து மாந்தர்களுக்கும் இறைவனின் உள்ளமையையும், அவனின் கட்டளைகளையும், மறு உலகில் அவன் தரிசனத்தையும் ஞாபகப்படுத்துகின்ற கோட்பாடுகளைக் கொண்டே திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவ்வுலகில் அவதரித்தார்கள். இந் நற்செய்தியோடு பெருமானார் வந்திருந்தாலும், அன்னவர்கள் தன் வாழ்வு முழுவதும், பெண்கள், சிறுவர்கள், ஆண்கள், அடிமைகள், ஏழை, பணக்காரன், ஒடுக்கப்பட்டவன் என யாவரின் விண்ணப்பங்களை கேட்பவர்களாகவும், அவர்களை அரவணைத்து ஆறுதல் அளிப்பவர்களாகவும் இருந்தார்கள். (பக்கம் 214)

நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அரபகத்தின் எல்லா கோத்திரத்தார்களுடனும் உறுதியான உறவை வைத்திருந்தார்கள். அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களாக இருப்பினும் சரியே. (பக்கம் 76)

இந்த நல்லுறவின் அடிப்படையில்தான், முஸ்லிம்கள் சொல்லெணா துன்பத்திற்கு ஆளான பொழுது, அவர்களை இஸ்லாத்தையே ஏற்காத அபிஸினியா மன்னரின்

பாதுகாப்பில் அடைக்கலம் பெற அண்ணலார் அனுப்பிவைத்தார்கள். இது போன்ற நிலை, பெருமானாரின் வாழ்க்கை முழுவதும் காணப்பட்டது. அண்ணலார் தங்களுடைய நட்புறவை நம்பிக்கையின் அடிப்படையிலும், சர்வ சமயங்கள் மதிப்பளிப்பின் அடிப்படையிலும் அமைத்தார்கள். நாயகத்தின் அருமைத் தோழர்களும் கூட இந்த நட்புறவை புரிந்துகொண்டு இஸ்லாத்தை ஏற்காதோருடனும் நல்லன்புறவை வைத்து, அவர்களின் சிரமத்திலும் கூட உளமுவந்து உதவினர் (பக்கம் 76-77)

கண்மணி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மக்களையும் அவர்களின் சூழ்நிலைகளையும் தனித்தனியே கருத்தில் கொண்டு அவர்களையும் அவர்கள் சார்ந்திருக்கும் மதக்கோட்பாடுகளையும் மிகவும் மதிப்பவர்களாக இருந்தார்கள். ஒரு யூத வாலிபர் பெருமானாருடன் பல்லாண்டுகள் நட்புறவு கொண்டு, நாயகம் எங்கு சென்றாலும், உடன் செல்பவராக இருந்தார். எந்தச் சூழ்நிலையிலும் அருமை நாயகம், அவரது கொள்கையை விட்டுவிடக் கூறியதே இல்லை. இறுதியில் ஒருநாள் அந்த யூத வாலிபர் கடுமையான நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தார். அவ்வேளையில்தான், தன் தந்தையிடம் தான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள அனுமதி கோரினார். அருமைச் சகோதரர்களே! அந்த வாலிபர், பெருமானாருடன் இருந்த காலமெல்லாம், தன் மதத்தில் இருந்துகொண்டே பெருமானாரின் அன்பையும் சகவாசத்தையும் ருசித்து வந்துள்ளார். (பக்கம் 90)

## சமுதாயப் பங்களிப்பு மூலம்

இஸ்லாத்தை புதிதாக ஏற்றுக்கொண்ட முஸ்லிம்கள் வீடுகள் இல்லாத நிலையில், பல சந்தர்ப்பங்களில் உண்பதற்குக்கூட உணவு இல்லாத நிலையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அருகிலேயே, மஸ்ஜிதிற்கு அருகாமையில் தங்கியிருந்தனர். (பக்கம் 114)

ஆதரவற்ற இவர்களைக் குறித்து கருணை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மிகவும் கவலையுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் மீது தனி அன்பு கொண்டு அவர்களோடு அன்புடன் அளவலாவி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்பவர்களாக இருந்தார்கள். (பக்கம் 114)

அருமைத் தோழர்கள் எண்ணினார்கள்: நாயகத் திருமேனி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நம் மீது அருளும், அன்பும் கொண்டு, நம்மை கௌரவித்து அரவணைக்கும் அண்ணலாக உள்ளார்களே என்று. ஆம்! நம் உயிரினும் இனிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், அவர்களை நேசிக்கத்தான் செய்கிறார்கள். அதை அவர்களிடமும் எடுத்துக் கூறினார்கள். அத்துடன், உங்களிடையே ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை வெளிப்படுத்தி கொள்ளுங்கள் என்றும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.மேலும் அருளினார்கள்: “எவரொருவர் தன் சகோதரரையோ, சகோதரியையோ நேசித்தால், தான் நேசிப்பதை அவர்களிடம் எடுத்துக் கூறட்டும்” என்பதாக. ஒரு சந்தர்ப்பத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், முஆத் இப்னு ஜபல் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கரத்தை பிடித்துக் கொண்டு “முஆதே! அல்லாஹ்விற்காக உன்னை நேசிக்கிறேன். மேலும் உமக்கு நான் வஸிய்யத்து செய்கிறேன், முஆதே! ஓவ்வொரு கடமையான தொழுகைக்குப் பின்னும் இறைவா! உன்னை நினைப்பதற்கு எனக்கு அருள் புரிவாயாக! உனக்கே எல்லாப் புகழும். மேலும் உன்னை நான் வணங்கும் வழிபாட்டை சம்பூரணமாக்குவாயாக! என்று துஆ செய்ய மறந்துவிடாதீர்கள். என்று கூறினார்கள். (பக்கம் 114)

அருமைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தன்னிடமோ, தன் தோழர்களிடமோ மன்னிப்பு கோரி வந்தவர்களை எல்லாம் மன்னித்தார்கள். தன் அருமை பெரிய தந்தையாரை கொன்ற வஹ்ஷி இப்னு ஹர்பையும் கூட பெருமானார் மன்னித்தார்கள். (பக்கம் 178)

அபூ ஜஹ்லின் மகனார் இக்ரிமா ரலியல்லாஹு அன்ஹு பெருமானாரின் அருள் கரம் பற்றி ஈமான் கொண்ட சமயம், தன் அன்பு தோழர்களை நோக்கி கூறினார்கள்: இக்ரிமா, அபூ ஜஹ்லின் மகனாவார். இப்பொழுது அவர் உங்களிடம் மு.்.மினாக வந்துள்ளர். எனவே அவருடைய தந்தையை எத்தருணத்திலும் நிந்திக்க வேண்டாம். உங்கள் நிந்தனைகள் மரணித்தவர்களை சென்றடையாது. மாறாக, வாழ்பவர்களை வேதனைப்படுத்தும் என்று கூறுவதின் மூலம் பிறருடைய குற்றங்களை மன்னிப்பதுடன் ஒருவருடைய குற்றத்திற்கு மற்றவர் பொறுப்பாக மாட்டார். அது அவரது தந்தையாக இருப்பினும் கூட, என்று சுட்டிக்காட்டினார்கள். (பக்கம் 178)

தன் மார்க்கத்தை பின்பற்றாத அவிசுவாசிகளிடம் கூட பாரபட்சம் காட்டாத நிலைக்கு பெருமானாரே முன் மாதிரியாக திகழ்ந்தார்கள். தன் நபித்துவத்தின் காலம் முழுவதும் இஸ்லாத்தை ஏற்காத வியாபாரிகளின் விலைமதிப்பற்ற அமானிதப் பொருள்களை பாதுகாத்து அவர்களின் நன் மதிப்பை பெற்றிருந்தார்கள்.

தான் பிறந்த மக்காவை விட்டு மதினாவை நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்ட சமயத்தில் கூட, தன்னிடமிருந்த அமானிதப் பொருள்களை உரியவரிடம் சேர்க்கும் பொறுப்பை செய்யிதுனா அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் ஒப்படைத்து, இஸ்லாம் போதிக்கும் நீதி, நேர்மை, வாக்குறுதி பேணல், மத பாரபட்சமின்மை போன்ற நற்குணங்களை நிலை நாட்டினார்கள். (பக்கம் 77)

## சூழ்நிலைக்கு தகுந்தவாறு மாற்றும் தன்மை

மதினாவில் வந்ததும் மஸ்ஜிதுல் குபாவில் நாயகத்தின் முதல் பேச்சே முஸ்லிம்களின் அடிப்படை கடமைகளை குறித்துதான் அமைந்தது. “அமைதியை பரப்புங்கள். பசித்தோருக்கு உணவளியுங்கள். உறவுகளை பேணுங்கள். மக்கள் துயிலும் பொழுது நீங்கள் விழித்து இபாதத் செய்யுங்கள். நீங்கள் சந்தோஷமாக சுவனம் நுழைவீர்கள்”. இந்த வஸிய்யத்தின் துவக்கமும், இறுதியும் அமைதி, சந்தோஷத்தை குறிக்கின்ற “ஸலாம்” என்கிற வார்த்தையை கொண்டு உள்ளது. இதன் மூலம் இந்த மண்ணில் தன் தோழர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதனை உணர்த்திவிட்டார்கள். ஏழைகள் மீது அன்பு, உறவுகள் மேம்பாடு போன்ற போதனைகள் ஒரு மு.்.மினின் உள்ளமையை பறைசாற்றும் அடித்தளங்கள். இதனை ஒவ்வொரு மு.்.மினும் நிரந்தரமாக மதிக்கவேண்டும். (பக்கம் 87-88)

# முன்னேறும் தன்மை

பெருமானாரின் வாழ்வின் ஒவ்வொரு சிறிய அல்லது பெரிய விஷயங்கள் அல்லது நிகழ்வுகள், நம்மை புதுப்பிக்கும் மற்றும் மறுதளத்திற்கு நம்மை இட்டுச்செல்லும் கருவிகள் எனலாம். (பக்கம் 214)

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் சன்மார்க்கப் பாதையில், தோழர்களின் கருத்துகளையும் கேட்டறிந்து அவர்களையும் ஆலோசனைகள் வழங்க தூண்டினார்கள். மிகக் கவனமாக அவர்களின் கருத்துகளையும் செவிமடித்தார்கள். பல சந்தர்ப்பங்களில் தோழர்களிடம் கேள்விகள் கேட்டு அவர்களின் கருத்துக்கள் மாறுபடும் பட்சத்தில் தனது பதிலை பதிவு செய்தார்கள். (பக்கம் 102)

உதாரணமாக, ஒரு முறை பெருமானார் கூறினார்கள்: “தன் எதிரியை வீழ்த்தியவன் சுத்த வீரன் அல்லன்”. தோழர்கள் ஆச்சரியத்துடன் கேட்டார்கள். அப்படியானால், யார் உண்மை வீரன் நாயகமே? அதற்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அளித்த பதில், ஸஹாபிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மேலும் அதன் ஆழமான அர்த்தத்தின்பால் திருப்பியது. பெருமானார் கூறிய பதில்: உண்மை வீரன், எவனொருவன் தன் கோபத்தை அடக்குகிறானோ, அவனே. (பக்கம் 102)

கேள்வி கேட்பதன் மூலமும், வாதங்கள் மூலமும் தன் தோழர்களின் அறிவுத்திறனை உசுப்பிவிட்டு அவர்களை வெறுமனே இயந்திரத்தனமான பணிவை விட்டும் திருப்பி, அறிவு ஜீவிகளாக மாற்றினார்கள். இப்பரிணாமம் அன்புத் தோழர்களை ராஜதந்திரிகளாக மாற்றியது. (பக்கம் 103)

சமூகத்தில் ஒதுக்கப்பட்ட, வேதனைப்படுத்தப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட மகளிர்களின் மனக்குறைகளை கேட்டறிந்து ஆறுதலளித்தார்கள். அருள்மறை குர்ஆனும் இதனை உறுதி கூறுகிறது.

*“(நபியே!) தன் கணவனைப்பற்றி உம்மிடம் தர்க்கித்து அல்லாஹ்விடம் முறையிட்டாளே, அந்த ஒருத்தியின் சொல்லை திட்டமாக அல்லாஹ் செவியேற்றுக்கொண்டான். அல்லாஹ் உங்களிருவர்களுடைய வாக்கு வாதங்களையும் செவியேற்றுக் கொண்டிருந்தான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் செவியேற்பவனாகவும், பார்ப்பவனாகவும் உள்ளான்”. (குர்ஆன்: 58-1)*

இதனைப்போன்றே தன் கணவனுடன் வாழப் பிரியமில்லாத ஒரு பெண்ணின் முறையீட்டை கேட்டறிந்து, தீர்க்கமான ஆய்விற்கு பின் இருவரையும் பிரித்து வைத்தார்கள். ஒரு முறை தன் அனுமதியின்றி தனக்கு நிகாஹ் முடித்து வைத்த தன் தந்தையை குறித்து ஒரு பெண் புகார் கொடுத்த சமயம், அந்த நிகாஹையே முறிப்பதற்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் முற்பட்டார்கள். அது சமயம், அந்தப்பெண், தன் தந்தை தெரிவு செய்த கணவரை தான் பொருந்துவதாகவும், இதன் மூலம் எல்லா தந்தைகளும் தன் மகளின் விருப்பமில்லாமல் திருமணத்தை முடித்துவைக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்டவே தான் இவ்வாறு செய்ததாகவும் கூறினாள். (பக்கம் 213)

**Prepared By the office Of the Mufti**

Islamic Religious Council of Singapore (MUIS)

*Tamil translation by:*
Imam Nahvi Mahlari
Masjid Abdul Gafoor

*Typesetting by:*
Imam Umer Riluvanullah Jamali &
Ms. Nilofur Nisa
Masjid Abdul Gafoor


Majlis Ugama Islam Singapura
(Islamic Religious Council of Singapore)
Singapore Islamic Hub
273 Braddell Road , Singapore 579702
Tel: +65 6256 8188 • Fax: +65 6253 7572
www.muis.gov.sg • email: info@muis.gov.sg